**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 169/2012 P.W.7 /L.W.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. விஷ்ணுகுமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.09.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 19.03.2011 ம் தேதி 17.30 மணிக்கு குளச்சல் காவல்நிலைய தலைமை காவலராக பொதுநாட்குறிப்பு அலுவலில் இருந்தபோது முத்தூட் பைனான்ஸ் தமிழ்நாடு தென்மண்டல மேலளார் **முத்துகுமார் என்**பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்றேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.4 ஆகும்.** மேற்படி புகார் மனுவின் அடிப்படையில் காவல்நிலையக்குற்ற எண். 84/2011 ச/பி. 406, 420 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

என்னிடம் கொடுத்த புகார் மனுவில் குற்றவாளியின் அடையாளம்

குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எந்த தேதியில் காணாமல் போனது என்ற தகவல் இல்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் தங்களால் ஒரு குறிப்பிட்டுள்ள நபரை அடையாளம் காட்டமுடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான்சொன்ன தேதியில் முதல் தகவல் அறிக்கையானது பதிவுச் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை -முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.